குடியாத்தம் நகரில் குடிநீர் பற்றாக்குறை.

*வினா 392—திரு. வி. கே. கோதண்டராமன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர்—கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) குடியாத்தம் நகரில் குடிதண்ணீர் நெருக்கடி நிலை அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அது குறித்து எடுத்துக் கொண்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :

(அ) வினாவில் கண்டுள்ளபடி குடியாத்தம் நகரில் குடிநீர் நெருக்கடி பற்றி அரசின் கவனத்திற்கு ஏதும் கொண்டுவரப்படவில்லை.

(ஆ) வினா எழவில்லை.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், ஏற்கனவே பலமுறை கனம் அமைச்சரவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது, ஒருவேளை மறந்துவிட்டாரோ என்னவோ தெரியவில்லை. அவர்கள் தீவிரமாகக் கவனம் செலுத்துகிறார்கள் என்பது எனக்குத் தெரியும். இருந்தாலும் இந்த விஷயத்தில் கவனத்திற்குக் கொண்டு வரப்படவில்லை என்பது சரியல்ல. இப்பொழுது அந்தக் குடியாத்தம் நகரிலுள்ள குடிதண்ணீர்ப் பிரச்னையைத் தீர்ப்பதற்காக பாலாற்றிலிருக்கும் தண்ணீரைக் கொண்டுவர, பசுமத்தூரில் பம்பிங் ஸ்டேஷன் கட்டப்பட்டு, தனியாக மின்சார லயன் கொண்டு வர ஏற்பாடு செய்யப்பட்டது. அந்த லயன் எங்கிருந்து கொண்டு வரப்பட்டது என்று சொல்ல முடியுமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவரவர்களே, அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்படவில்லை என்று நான் சொன்னேன். எனக்குத் தெரியும் என்று மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்னது சமீபத்தில் அந்தத் தொகுதியில் என்னுடன் சுற்றுப்பயணம் வந்தபொழுது கிராமங்களில் குடிதண்ணீர் இல்லாத இடங்களுக்கு உத்தரவிட்டு வந்திருக்கிறேன். அவர் கேட்கும் கேள்வியைப் பொறுத்தவரையில், சமீபத்தில் பாலாற்றில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கின் காரணமாக, பிரதான நீரேற்றக் குழாயில் கசிவுகள் ஏற்பட்டமையால் 7—12—1977 முதல் பாலாற்றிலுள்ள தலைமை நீர் இறைக்கும் நிலையம் இயங்கவில்லை. எனவே, அதிகப்படியான நீரைப் பெறுவதற்காகப் போட்டிப் பேட்டை தலைமை நீர் இறைக்கும் நிலையம் 24 மணி நேரமும் இயக்கப்பட்டு வருகின்றது. தினசரி தேவையான 8·5 இலட்சம் காலன்கள் தண்ணீருக்குப் பதில் தினம் 6 இலட்சம் காலன்கள் தான் தற்போது விநியோகிக்க முடிகின்றது.

1978 மார்ச் 4]

[முற்பகல் 9·40]

அதற்காக, போடிப்பேட்டையிலுள்ள தலைமை நீர் இறைக்கும் நிலையம் 24 மணி நேரமும் வேலை செய்கிறது. வண்டியிலும், லாரி மூலமாகவும் தண்ணீர் கொடுத்து வருகிறார்கள். விரைவிலே அங்கேயுள்ள இரண்டாவது மின் ஓட்டத்திலேயிருக்கக்கூடிய பம்ப் செட் வேலை செய்ய ஆரம்பித்தவுடனே அங்கே குடிதண்ணீர் விரைவிலே கிடைக்கும். அதற்கு வேண்டிய வேலைகளை, நகராட்சியும் குடிநீர் வடிகால் வாரியமும் பரிசீலனை செய்து வருகின்றன.

திரு. எம். ஏ. லத்தீப் : தலைவரவர்களே, அரசுக்கு இது வரையில் இது விஷயமாகத் தெரியாது என்று சொன்னார்கள். 1973-லேயிருந்து 1975-வரையிலே நானே கொடுத்துள்ளேன்; பேரணாம்பட்டு பகுதி மக்களிடமிருந்து மனுவை வாங்கிக் கொடுத்திருக்கிறேன். வட ஆற்காடு மாவட்ட வளர்ச்சி மன்றக்கூட்டத்திலே இரண்டுமுறை இந்தப் பிரச்னை எழுப்பப்பெற்று, தீர்மானமே நிறைவேற்றியிருக்கிறார்கள். அப்படியிருந்தும் ஏன் இதை அரசுக்கு கொடுக்கவில்லை? அதிகாரிகள் கவனம் செலுத்தாமல் இருக்கிறார்களா என்பதை அறிந்து இனிமேலாவது நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, அரசுக்கு முறையிடவில்லையென்பது அரசுக்கு நேராக மக்களிடமிருந்து அங்கே குடி தண்ணீர் பற்றாக்குறை இருக்கிறது என்ற மனு வரவில்லையென்று பொருள். உள்ள நிலையென்னவென்றால், நகராட்சியும் குடிநீர் வடிகால் வாரியமும் அங்கு குடிதண்ணீர் வழங்கும் வசதிகளைச் செய்வதில் ஏற்பட்டுள்ள சிக்கலைத் தவிர்ப்பதற்கு ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கின்றன என்று சொன்னேன்.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், சர்க்காருக்கே மனு கொடுத்துள்ளோம். கனம் அமைச்சருக்கும் மனு கொடுத்திருக்கிறேன். வாட்டர் போர்டு மானேஜிங் டைரக்டருக்கும் மனு கொடுத்திருக்கிறேன். என் முன்னாலேயே, தொலைபேசி மூலமாக அமைச்சரவர்கள் கூறியுள்ளார்கள். இருந்தாலும் மறந்திருக்கலாம். தயவு செய்து நான் கேட்பதெல்லாம், அந்த மின்சார இணைப்பைத் தனியாகக் கொண்டு வரும்போது, குடியாத்தம் சப் ஸ்டேஷனிலே எடுக்கப்பட்டுள்ளது. அதனால், விவசாயிகளுக்கும், குடியாத்தம் நகரத்திலேயுள்ள இரண்டு மில்களுக்கும் சப்ளை போதுமானதாக இல்லாமல் போயிருக்கிறது. அந்தக் காரணத்தினால் 2 மில் மனேஜ்மென்டாரும், லோ டென்ஷன் அடிப்படையிலே, 2 மணி நேரம்................

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விளக்கம் வேண்டாம், சுருக்கமாகத் தண்ணீர் வேண்டும் என்று சொல்லுங்கள். அமைச்சருக்கு அந்த டெக்னிக்கல் டீடெய்ல்ஸ் எல்லாம் சொல்லித் தரவேண்டாம்.........

திரு. வி. கே. கோதண்டராமன் : அமைச்சர் கவனத்திற்கு கொண்டுவரவில்லையென்று சொன்னார்கள். அதனால் ஞாபகப் படுத்த வேண்டியிருக்கிறது. லோ டென்ஷனிலே இரண்டு மணி நேரம் வேலை செய்ய முடியாத நிலையிலே ஸ்தம்பிக்கப்பட்டு, கனம் மின்சார அமைச்சருக்கும் மற்ற அதிகாரிகளுக்கும் சொல்லப் பட்டது. இருந்தாலும், மின்சார அமைச்சரைக் கேட்டபொழுது, அவர் எப்படித் தட்டிக் கழித்து, தண்ணீர் கொடுக்கவேண்டு மென்றால் அந்த அமைச்சர்..........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி கேளுங்கள் சார். பேசிக் கொண்டே போகிறீர்கள். கோதண்டராமன், தயவுசெய்து கேள்வி கேளுங்கள்.

திரு. வி. கே. கோதண்டராமன் : கூட்டுப் பொறுப்பு இருப்பதால், மின்சார அமைச்சரை அணுகி, போதுமான அளவுக்கு மேலும் மின்சாரத்தைக் கொண்டு வருவதற்கான கருவிகளை டிரான்ஸ்பார்மர்களை ஏற்படுத்தி, உடனடியாகத் தண்ணீர் கொடுப்பதற்கும் அந்த மில்களைத் தொடர்ந்து நடத்துவதற்கும் ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி கேட்டதற்கு எனக்குக் கொடுக்கப் பட்டிருக்கிற தகவலை நான் படித்தேன். அதற்குப் பின்னால், சென்ற மாதம் 19-ம் தேதி அந்தத் தொகுதிக்கு மாண்புமிகு உறுப்பினரோடு சுற்றுப்பயணம் செய்த பொழுது, அவர் சொன்ன முறையீடுகளையெல்லாம் கேட்டு, இன்னும் சொல்லப்போனால் ஜீ.எல்.ஆர்.—கிரவுண்ட் லெவல் ரிசர்வாயர் வைத்து 6 குழாய்கள் வைக்கலாம் என்றிருந்ததை, அந்தக் கிராமம் விசித்திரமாக, நீள மாக இருப்பதால், 6 பொதுக் குழாய்கள் பப்ளிக் பவுன்டன் கட்ட வேண்டுமென்று, உத்தரவு புதிதாக மாற்றி அமைத்து விட்டு வந்திருக்கிறேன். அங்கே மின்சார பம்ப் ரிப்பேராகி யிருக்கிறது. அதை ரிப்பேர் செய்துவிட்டால், குடிதண்ணீர் பிரச்னைத் தீர்ந்துவிடும் என்று சொன்னேன். 24மணி நேரமும் பாலார் ஹெட் ஒர்க்ஸ் வேலை செய்ய ஆரம்பித்துவிடும். அப பொழுது குடி தண்ணீர் பிரச்னைத் தீர்ந்து விடும்.